(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **169**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 மே 26, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

***கௌரவ திலங்க சுமதிபால,*** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைசரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி பிரதி அமைச்சரும் புத்தசாசன பிரதி அமைச்சரும்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பணம் :** (1) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை கடற்படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான கிறஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2017.04.01 முதல் 2017.04.30 ஆம் திகதி வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத்திட்டத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் வரவு செலவுத் திட்ட உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பினை நான் சமர்ப்பிக்கப்பித்து மேற்படி குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற அரசாங்கக் கட்சி முதற்கோலாசானின் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழு அறிக்கைகள் சமர்ப்பணம்:** (1) **போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சமல் ராஜபக்ஷ,** போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "2014 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆண்டு அறிக்கை", "2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கைகள்" மற்றும் "2016 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) **சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லக்கி ஜயவர்தன,** சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திருத்தஞ் செய்யப்பட்ட, 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வாழ்வின் எழுச்சிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்” தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை சபாபீடத்திலிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) **சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “வடமாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை அதிகாரசபை நியதிச் சட்ட வரைவு” மீதான அக்குழுவின் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. மனுக்கள்:**

(1) நுகேகொட, நாலந்தாராம வீதி, இல. 64 ஏ யில் வதியும் திரு. கிங்ஸ்லி டோசனினது 2016.09.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஏ.டி. சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்தார்.

(2) (i) வத்தளை, பழைய கந்த வத்த, இல. 58 இல் வதியும் திரு. பீ.எஸ். சந்திரசிரி பெரேராவினது 2016.11.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) அநுராதபுர, மிஹிந்தலா வீதி, கன்னட்டிய, யுனிட் 8/1 இல் வதியும் திரு. டப்ளியூ.எம்.பி. சரத் குமாரவினது 2017.02.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ துமிந்த திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(3) மாத்தறை, ஹித்தட்டிய மத்தி, மெதகெதரவத்தவில் வதியும் திரு. பி.டி. ரத்னபாலவினது 2017.03.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

(4) (i) பண்டாரவளை, அம்பதென்னவத்த, 2 ஆம் ஒழுங்கை, இல. 20 ஏ யில் வதியும் திரு. எஸ்.எஸ். நடராஸினது 2017.02.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) பண்டாரவளை, அம்பதென்னவத்த, 2 ஆம் ஒழுங்கை, இல. 20 ஏ யில் வதியும் திரு. எஸ்.எஸ். நடராஸினது 2017.02.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ அ. அரவிந்த் குமார் சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. வட மாகாண சுற்றுலாத்துறை அதிகாரசபை நியதிச் சட்ட வரைவு:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 46 அ (3) (அ) மற்றும் (ஆ) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2017 மே மாதம் 03 ஆம் திகதி சபாநாயகரினால் ஆற்றுப்படுத்தப்பட்ட வட மாகாண சுற்றுலாத்துறை அதிகாரசபை நியதிச் சட்ட வரைவு மீதான அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள கால எல்லை 2017 யூலை மாதம் 03 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "ஸ்ரீ லங்கா கமநல நிறுவனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" என்னும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக கௌரவ விமலவீர திசாநாயக்க பிரேரித்தார். கௌரவ வீரகுமார திசாநாயக்க அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கமத்தொழில் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

அமர்வு தற்காலிகமாக இடைநிறுத்தம்.

மு.ப. 11.42 மணிக்கு

நண்பகல் 12.00 மணிவரை கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

நண்பகல் 12.00 மணி

அமர்வு மீண்டும் கூடியது பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

**6. வாழ்வின் எழுச்சி சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் :** சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க திருத்தஞ் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 25(2) மற்றும் 29 (2) பிரிவுகளோடு சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 42 ஆம் பிரிவின் கீழ், சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 07 ஆம் திகதிய 2009/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 12.32 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. ஒத்திவைப்பு :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 1.56 மணிக்கு, இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2017 யூன் மாதம் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.